தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின்
செயல்முறைகள் பிறப்பிப்பவர் திரு.தி.திருமால், பி.காம்

ந.க. 14165 2022 அ1 நாள்: [illegible]

---

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியாளர் தொகுதி - தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகு - பணியிடைக் காலத்தில் காலஞ்சென்ற கிராம உதவியாளர் திரு.கே.கஜேந்திரன் என்பவரின் மகன் திரு.க.பழனிகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ1.34462-2020 நாள்.01.09.2022
2) இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.அ1.422-2022 நாள்.19.09.2022.
3) அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை, நாள். 08.03.2023.
4) மனித வள மேலாண்மைத் (G2) துறை கடித எண். 5532/G2/2023-1, நாள். 20.09.2023.
5) அரசு செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-9(2) பிரிவு, கடித (1டி) எண். 368, நாள். 01.04.2024, கடித (1டி) எண். 850, நாள். 08.12.2023, கடித (1டி) எண். 900, நாள். 26.12.2023 மற்றும் கடித (1டி) எண். 13, நாள். 18.01.2024.
6) இவ்வலுவலக கடித ந.க.அ1-14165-2022 நாள்.20.09.2022, 28.01.2023, 31.01.2023, 22.02.2023, 31.03.2023, 20.07.2023
7) கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிருவாக ஆணையர் அவர்களது கடித எண். ஆ.கு.3/4600/2024, நாள். 20.02.2024.
8) மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

******

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில் பாபநாசம் வட்டம், தூழியக்கோட்டை கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடைக்காலத்தில் காலஞ்சென்ற (07.11.2020 அன்று) திரு.கே.கஜேந்திரன் என்பவரது மகன் திரு.க.பழனிகுமார் என்பவருக்கு பார்வை 1 மற்றும் 2-இல் காணும் ஆணைகளின்படி இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு 19.09.2022 முற்பகல் முதல் இம்மாவட்ட வருவாய் அலகில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியினை வரன்முறை செய்திடும்பொருட்டு அரசிடமிருந்து

ஆணைகள் பெற்றுத்தருமாறு சென்னை கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் வாயிலாக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

இந்நேர்வில் வருவாய்த் துறையில் பணியாற்றி பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவதற்கும் மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கும் பார்வையில் உள்ள (3இல்) அரசாணை, பார்வை 4, 5 இல் காணும் அரசு, மனிதவள மேலாண்மைத் துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் அரசுக் கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகள் ஆகியவற்றின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பார்வை 7-இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு இவ்வலுவலகம் வாயிலாக அனுப்பப்பட்ட முன்மொழிவுகள் மீள வரப்பெற்றுள்ளது.

எனவே, பார்வை 3-இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 4, 5-இல் காணும் கடிதங்களின்படி தனியர் ஏனைய விதிகளின்படி பூர்த்தி செய்துள்ளதாலும், விதித்தளர்வு ஏதும் தேவையில்லை என்பதாலும், இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவிக்குரிய குறும வயது தகுதியான 18-ஐ நிறைவு செய்துள்ளதாலும், மேலும், பார்வை 3-இல் காணும் அரசாணையில் பத்தி 16-ல் தெரிவித்துள்ளவாறு, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட தெரிவித்துள்ளதையடுத்து, இம்மாவட்ட வருவாய் அலகில் தஞ்சாவூர் வட்ட அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.க.பழனிகுமார் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்க்கண்டவாறு பணியினை வரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவங்கி விளம்புகை செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் (திருவாளர்) | பணியில் சேர்ந்த நாள். | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | க.பழனிகுமார் | 19.09.2022 மு.ப | 19.09.2022 மு.ப |

மாவட்ட ஆட்சியரின்

நேர்முக உதவியாளர் (பொது) (பொ)

தஞ்சாவூர்

பெறுநர்

திரு.க.பழனிகுமார்

இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், தஞ்சாவூர்.

நகல் - கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை.

நகல் - வட்டாட்சியர், தஞ்சாவூர்.

(தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)

நகல் - அ1 இருக்கைக்கு